பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி : 51331 ★ ஸ்தாபிதம் : 1953 ★ விலை : 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம். ஏ., எம். பி.

மலர் : 15] சென்னை : கார்த்திகை 12 உ (28 -11-67) செவ்வாய் வெளியூர் : கார்த்திகை 13 உ (29-11-67) புதன் [இதழ் : 138

ஏனோ வரவில்லை ?

★

புதுடில்லி, நவ. 27—

நாடாளுமன்ற மொத்த உறுப்பினர்களில் பாதி அளவு உறுப்பினர்கள்கூட இன்று அவைக்கு வரவில்லை.

ஆட்சி மொழி சட்டத்திருத்த மசோதாவை வாக்கெடுப்புக்கு விட்டபோது 206-பேர்தான் இருந்தனர்.

பல காங்கிரசு உறுப்பினர்கள் இன்று அவைக்கு வரவில்லை.

மொழிச் சட்டம்— அடுத்த கட்டம் என்ன?

மக்களவையில், ஆட்சிமொழிச் சட்டத் திருத்த மசோதாவை அறிமுகப்படுத்துவதற்கே எதிர்ப்புக் காட்டித் தோற்கடிக்க நினைத்துத் தோல்விபெற்றிருக்கும் காங்கிரசுக் கட்சியிலுள்ள இந்தி வெறிபடைத்த உறுப்பினர்கள், அடுத்த கட்டமாக, 'அதனை எப்படி இந்திமொழிக்கு ஆதரவாக வளைத்துக்கொள்ளலாம்' என்ற முயற்சியில் இறங்கியிருக்கிறார்கள் !

இதுபற்றி சட்ட அமைச்சர், தலைமை அமைச்சர் ஆகிய இருவரையும் தனித்துச் சந்தித்து விவாதிக்கவும் அவர்கள் தயாராக இருக்கின்றனர் !

"ஆண்டுதோறும், இந்திமொழி பெறும் முன்னேற்றம் குறித்து ஒரு அறிக்கை தரப்படவேண்டும்"—

"இந்திக் கடிதப் போக்குவரத்தில் ஆங்கில மொழி பெயர்ப்பைத் தயாரிக்கும் வேலையை, இந்தி மொழி நிர்வாகத்தில் இருக்கும் இடங்களின்மீது சுமத்தக்கூடாது ; 'ஆங்கில மொழிபெயர்ப்பு வேண்டும்' எனற நிலையிலுள்ள இடங்கள், அந்த வசதிகளைச் செய்துகொள்ளவேண்டும்"—

என்ற இரண்டு வழி வகைகளை மொழிச் சட்டம் உள்ளடக்கியதாக இன்று வேண்டும்—என இந்தி மொழி உறுப்பினர்கள் முயற்சி செய்வதாகத் தெரிகிறது !

ஆண்டுதோறும் 40 அணுகுண்டுகள்

புதுடில்லி, நவ. 27—

"ஆண்டொன்றுக்குச் சுமார் 40 அணுகுண்டுகளைச் சீனு உற்பத்தி செய்யமுடியும்; ஏறகனவே, 20 கிலோ டன்கள் எடையுள்ள 109 அணுகுண்டுகளைத் தயாரித்துவைத்திருப்பதாகத் தெரிகிறது"

என்று பாதுகாப்பு அமைச்சர் சுவரண் சிங், நாடாளுமன்றத்தில் கூறினர்.

திருக்குறள் எழுதியதாலே பஸ் விபத்தா?

சட்டமன்றக் கேள்விக்கு அமைச்சர் விளக்கம்

சென்னை, நவ. 28—

"தமிழக அரசுப் போக்குவரத்து பஸ்களில் திருவள்ளுவர் படம் வைப்பதற்கு ரூ. 3502-ம், திருக்குறள் எழுதுவதற்கு ரூ. 700-ம் செலவிடப்பட்டது"

என்று பொதுப்பணித் துறையமைச்சர் திரு. மு. கருணாநிதி, இன்று சட்டமன்றத்தில், கேள்வி ஒன்றுக்கு விடையளித்தார்.

கே. விநாயகம் (காங்):—"பஸ்ஸில் எழுதப்பட்டுள்ள திருக்குறள் யாருக்காக? உதாரணமாக 'யாகாவா ராயினும் நாகாக்க—காவாக்கால் சோகப்பர் சொல்லிழுக்குப்பட்டு' என்று உள்ள குறள் யாருக்கு? பஸ்ஸில் பயணம் செய்பவர்களுக்கா?—பஸ்ஸை ஓட்டிச் செல்லும் டிரைவர், கண்டக்டர்களுக்கா?"

அண்ணா (குறுக்கிட்டு):—"நாக்கு உள்ள அனைவருக்கும்தான் !"

சித்தன் (காங்):—"பஸ்ஸிலே 'ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்' என்றிருந்ததை, 'தமிழக அரசுப் போக்குவரத்து' என்று எழுதப்பட்ட வேலை டெண்டர் மூலம் காண்டிராக்டுக்கு விடப்பட்டதா? அல்லது, இலாகாவில் உள்ளவர்களே அந்த வேலையைச் செய்தனரா?"

மு. கருணாநிதி:—"ஐயாயிரம் ரூபாய்க்கு மேற்பட்ட செலவு ஏற்படும் வேலைகட்குத்தான் டெண்டர் விடவேண்டும். இது அதற்குட்பட்ட தொகையாகையால், இலாகாவில் உள்ள தொழிலாளர்களின் உழைப்பின் மூலமே செய்யப்பட்டது."

எம். எஸ். மணி (தி. மு. க.):—"பஸ்ஸிலே திருக்குறள் எழுதப்பட்டிருப்பதால் விபத்துக்கள் ஏற்படுவதாக, ஒரு காங்கிரசுப் பிரபலஸ்தர்—இந்த மன்றத்தின் உறுப்பினர் கூறியதாகச் சொல்லப்படுகிறதே, அது உண்மையா?"

அமைச்சர்:—"திருக்குறள் எழுதப்பட்டதால் விபத்து ஒன்றும் ஏற்படவில்லை; அப்படி ஏற்பட்டதாகச் சொல்லுவது, சொல்லுபவர்கட்கு ஏற்பட்ட விபத்தாகத்தான் இருக்கமுடியும்."

பொன்னையா நாடார்:—"கன்னியாகுமரியிலிருந்து திருவனந்தபுரத்துக்குச் செல்லும் பஸ்களில் ஆங்கிலத்திலும் எழுதப்படுமா?"

அமைச்சர்:—"அப்படி எழுத முயற்சி எடுத்துக்கொள்ளப்படும்."

கா. வேழவேந்தன்:—"எற்கனவே, 'கவர்ன்மெ[illegible] டிரான்ஸ்போர்ட்' [illegible] ததை, முந்திய அர[illegible] ராஸ் ஸ்டேட் டி[illegible] என்று மார்[illegible] அதற்கு எ[illegible] என்ற கண[illegible] யுமா?"

பதில்:—[illegible] போது [illegible]

கே[illegible]

கேர[illegible] டன் [illegible] வாக்க[illegible] இப்பே[illegible]

'மனித இயந்திர'த்தை மதிக்க மறுப்பதேனோ?

டில்லிக்கு அண்ணா அறிவுறுத்தல்

சென்னை, நவ. 28—

"மனிதனைக் காட்டிலும் திறமையாகப் பணியாற்றும் நவீன கருவிகளைப் பற்றி இன்று மத்திய அரசிலுள்ளவர்கள் கூறுகின்றனர் ; 'அதையும் மனிதன்தான் செய்தான்' என்பதை, அவர்கள் மறந்துவிடலாகாது !

"உணர்ச்சியால் உந்தப்படுபவன் மனிதன் ; அந்த மனிதன், ஓர் அருமையான இயந்திரம் ; அவனுடைய இதயத்தில் வலி—அவனது கண்களில் கண்ணீர்—அவனது உடலில் வாட்டம் காணப்பட்டால், அந்த மனித இயந்திரத்திடமிருந்து முழுப் பயனையும் பெற முடியாது !

தொழிலாளருக்குச் செலவிடுவது நட்டக்கணக்கில் வருவதில்லை !

"தொழிலாளர்கள் நல்ல பலம்பெற்றால், தாங்கள் ஈடுபட்டுள்ள பணிகளில் மேலும் அவர்கள் தெம்புடன் உழைப்பார்கள் ; மனமும் உடலும் மகிழ்ச்சியாக இருந்தால்தான், உற்பத்தியின் அளவு அதிகரிக்கும்—செல்வம் வளரும் !

"எனவே, தொழிலாளர் நலனுக்காக எவ்வளவு செலவிட்டாலும், அது சமூகத்துக்கு, ஒன்றுக்கு ஒன்பதாகத் திரும்பி வரும் ; அவர்களுக்குச் செலவிடப்படும் தொகை, ஒருநாளும் நட்டக்கணக்கில் வருவதில்லை !'

(தொழிலாளர் இன்சூரன்சுத் திட்ட மருத்துவ மனையின் புதிய பகுதி திறப்பு விழாவில்)

தமிழக அரசுப் போக்குவரத்து

எழுதப்பட்ட சொற்றொடரில் இலக்கணப் பிழையா?

சென்னை, நவ. 28—

"தமிழக அரசுப் போக்குவரத்துப் பேருந்துகளில், தமிழக அரசு போக்குவரத்து என்று எழுதப்பட்டிருப்பதில் இலக்கணப் பிழை இருப்பதாகக் கூறப்படுகிறதே; இனியேனும் அந்தப் பிழை நேராமல் பார்த்துக்கொள்ளப்படுமா?"

என்று, இன்று சட்டமன்றத்தில் காங்கிரசு உறுப்பினர் சித்தன் கேட்டார்.

அதற்குப் பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. கருணாநிதி பதிலளிக்கையில் கூறியதாவது:—

"பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் போன்ற தமிழறிஞர்களையெல்லாம் கலந்து பேசித்தான், அது எழுதப்பட்டது ; 'தமிழக அரசு' என்பதற்கும்—'போக்குவரத்து' என்பதற்கும் இடையே அரசின் சின்னம் பொறிக்கப்பட்டிருப்பதால், 'ப்' என்னும் ஒற்றுத் தேவையில்லை—எனக் கூறப்பட்டது ; எனவே, இதில் இலக்கணப் பிழை ஏதும் இல்லை."

(5-ம் பத்தி தொடர்ச்சி)

அளித்துதவுவதாகத் தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்கள் ஒப்புக் கொண்டிருக்கிறார்.

இந்த 10,000 டன் அரிசி டிசம்பர் திங்களில் கேரளத்துக்கு அனுப்பப்படும்.

மக்களவையில் ஆட்சிமொழி மசோதா

ஒரு தொகுப்பு விளக்கம்

இந்திய வரலாற்றில் சரித்திர முக்கியத்துவம் பெற இருக்கும் ஆட்சி மொழி சட்ட (திருத்த) மசோதா, நாடாளுமன்றத்தில், நேற்று பிற்பகல் 1-30 மணியளவில் தாக்கல் செய்யப்பட்டது.

எதிர்பார்த்தவாறே, 'மசோதா அறிமுகமாவதே தவறு' என்று எதிர்ப்பு இருந்ததால், வாக்கெடுப்புக்கு விடப்பட்ட பின்னர்தான், அறிமுகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது !

குழப்பத்தின் உச்சக் கட்டம் காரணமாகவோ என்னவோ—தலைமையமைச்சர் இந்திராவே, வாக்களிப்பின்போது—தனது சொந்த விருப்பத்துக்கு மாறாக—மின்சாரப் பொத்தானை அழுத்தி, மசோதாவுக்கு எதிராக வாக்களித்திருக்கிறார் !

ஜனசங்கம், சம்யுக்த சோஷலிஸ்டுக் கட்சி ஆகிய இரண்டும், மசோதாவுக்கு எதிராக வாக்களித்திருக்கின்றன !

'இந்தி வெறியின் அடையாளச் சின்னம்' என்று அறிமுகமாகியிருக்கும் மத்தியப் பிரதேசத்துக் காங்கிரசு உறுப்பினர் சேத் கோவிந்த தாஸ்—கட்சிக் கட்டுப்பாட்டினையும் மீறி—மசோதாவுக்கு எதிராக 'ஓட்' அளித்திருக்கிறார் !

இதுபோல் அவர் செய்திருப்பது, 'இது இரண்டாவது தடவை' என்பது குறிப்பிடத்தக்கது !

'சட்டப் பிரச்சினை' என்ற போர்வையில் சேத் கோவிந்த தாசும், மது லிமாயியும் இந்தி மொழி வெறியின் பிரதிநிதிகளாக நின்று பேசியிருக்கின்றனர் !

நேருவின் உறுதிமொழி பற்றி பேச நேர்ந்தபோது ச. சோ. கட்சி உறுப்பினர் மது லிமாயி,

"நேரு யார்—எல்லோருக்காகவும் உறுதி மொழி தர? நேரு என் தலைவர் அல்லர் ; வருங்காலச் சமுதாயத்தினரை, அவரது உறுதிமொழி எப்படிக் கட்டுப்படுத்தும்?"

என வினவியிருக்கிறார்.

"இது ஒரு சமாதான ஏற்பாடு—என்ற வகையில் வரவேற்கத்தக்கது ; ஆனால், அரசியல் சட்டத்திலேயே திருத்தம் ஏற்படும் வரையில், இந்தி பேசாத மக்கள்—குறிப்பாகத் தமிழகம்—திருப்தியடையாது"

எனத் தெளிவுபடுத்தியிருக்கிறார்—நாடாளுமன்ற தி. மு. க. குழுத் துணைத் தலைவர் கி. மனோகரன் !

சேத் கோவிந்த தாசின் 'பிரபல' இராணுவப் பேச்சுப் பற்றி அவர் குறிப்பிட்டுப் பேசுகையில், இடையிடையே குறுக்கீடுகள் செய்த சேத் கோவிந்த தாசின் முயற்சிக்கு இடம் அளிக்காத வகையில் அவர் தொடர்ந்து உரையாற்றியதுடன்,

"ஒன்றைக் கூறுவதும் பின்பு மறுப்பதும் காங்கிரசுத் தலைவர்களுக்கு வழக்கமாகிவிட்டது"

என்று சூடும் கொடுத்திருக்கிறார்.

'மசோதா விவாதத்துக்கு வரலாம்' என்பதற்கு ஆதரவாக 181 வாக்குகளும், எதிர்ப்பாக 25 வாக்குகளும் இருந்தன !

உள்துறை அமைச்சர் சவாண், மசோதாவைப் படிக்க ஆரம்பிக்கும்போதே மேசையைத் தட்டியும், பலத்த கூக்குரல் எழுப்பியும் பலர் எதிர்ப்புத் தெரிவித்திருக்கின்றனர் !

"காங்கிரசு உறுப்பினர்கள், கட்சிக் கட்டுப்பாட்டையும் மீறி மசோதாவுக்கு எதிராக வாக்களித்துவிடுவார்கள் என்ற அச்ச நிலை இருப்பதால், உள்துறை அமைச்சரும், தலைமை அமைச்சரும் வேண்டுகோள் முயற்சிகளைத் தொடர்ந்து கடைபிடித்து வருகின்றனர் !

பிர்லாவிடம் ஆதாயம் பெறும் சவாண் உறவினர்கள்

நாடாளுமன்ற மேலவையில் குற்றச்சாட்டு

புதுடில்லி, நவ. 27—

சவாண் பம்பாய் முதலமைச்சரானதிலிருந்து, பிர்லா சகோதரர்களிடமிருந்து மத்திய உள்துறை அமைச்சரின் நெருங்கிய உறவினர்கள் ஆதாயம் பெற்றுவருவது .உண்மையா?'' என்று நாடாளுமன்ற மேலவையில் ஒரிசா சுதந்தர உறுப்பினர் லோகநாத் மிஸ்ரா கேட்டார்.

இந்த வினு கேட்கப்படும்போது சபையில் சவாண் இல்லை; கேள்வி நேரத்தின்போது முன்கூட்டியே முன்னறிவிப்புக் கொடுக்காமல் இவ்விதம் கேள்வி கேட்பதைத் தடுக்கக் காங்கிரசு உறுப்பினர்கள் முயன்றார்கள்; ஆனால் பலிக்கவில்லை.

சவானுக்கு எதிராக இவ்விதம் கேள்வியை எழுப்பப் பிர்லாவோ, அல்லது மொரார்ஜி குழுவோ ஏற்பாடு செய்திருக்கலாம் என்று கருதப்படுகிறது.

"பிர்லா குழாம் நிறுவனங்களுக்கு எதிராக ஊழல் ஒழுங்கீனங்களை — புகார்கள் குறித்து விசாரணைக் குழு அமைக்க, அரசு ஏதேனும் முடிவெடுத்திருக்கிறதா?'' என்று பல காங்கிரசு உறுப்பினர்கள் வினவினர்.

"பிர்லா நிறுவனங்களுக்கு அரசு சலுகை குறித்து சந்திரசேகர் அளித்த புகார் மனுக்கள் குறித்து ஆரம்ப விசாரணைகளை முடித்த பின்னர் அரசு இறுதி முடிவெடுக்கும்'' என்று மத்திய தொழில் அபிவிருத்தி—கம்பெனி விவகார அமைச்சர் அலி அகமத் கூறினர்.

'கேரோ' பிறந்த இடம்!

புதிய தகவல்

ஆக்ரா, நவ. 27—

"நாட்டின் தொழில் துறையில் அமைதியைக் குலைக்கும் ஆபத்தாகக் கிளம்பியுள்ள 'கேரோ' நடவடிக்கை பிறந்த இடம் மேற்கு வங்கமோ அல்லது வேறு இடமோ அல்ல; ஆக்ரா நகரமே ஆகும்'' என்று செய்தி வெளியாகியிருக்கிறது.

1951-ம் ஆண்டிலேயே ஆக்ரா விவசாயிகள், மாவட்ட மாஜிஸ்திரேட்டின் அதிகாரபூர்வ இல்லத்தைச் சூழ்ந்துகொண்டு 'கேரோ' போராட்டம் நடத்தினர். அரசாங்கப் பண்ணைக்கென்று தங்கள் நிலம் உரிமை செய்யப்பட்டதை எதிர்த்து அவர்கள் அவ்விதம் போராட்டம் நடத்தினர்; 'நிலத்தைத் திருப்பிக் கொடுக்கிறவரையில் போராட்டத்தைத் திரும்பப் பெறப்போவதில்லை' என்று கூறினர்; இறுதியில் அரசாங்கம், அந்த நிலத்தைத் திருப்பிக் கொடுத்துவிட்டது.

1953-ல் 300 விவசாயிகள் போலீசு நடவடிக்கைகளை [illegible]த்து மாவட்ட மாஜிஸ்திரேட் [illegible] இல்லத்தைச் சூழ்ந்து [illegible] 'கேரோ' போராட்டம் [illegible] அதுபற்றி விசாரிப்ப[illegible]காரி உறுதி கூறிய[illegible]ர்கள், முற்று[illegible]ர்.

[illegible]ாலீசு சூப்பி[illegible] போலீசா[illegible]து செய்ய[illegible]ச் சென்ற [illegible] அவர்களை [illegible]

[illegible] போராட்[illegible]டு மனங்[illegible]ற டாக்[illegible], உ. பி. [illegible] 'கேரோ' [illegible]ம் முழுவ[illegible]ற்கொண்

பிர்லா நிறுவனத்தில் டில்லி அமைச்சர் மகன்

மாதம் ரூ. 500 ஊதியம் பெறும் வேலை

புதுடில்லி, நவ. 27—

பிர்லாவிடம் மத்திய அமைச்சர் மகன் சம்பளம் வாங்கி வருகிறார்; இதை, நாடாளுமன்ற மேலவையில் அமைச்சரே ஒப்புக்கொண்டார்!

எதிர்க் கட்சி உறுப்பினர்கள் சரமாரியாகக் கேள்விகள் கேட்ட பின்னர், மத்திய தொழிலாளர் அமைச்சர் ஜெய்சுக்லால் ஹாத்தி, பிர்லாவின் நிறுவனத்தில் தமது மகன் வேலை பார்ப்பதை ஒப்புக்கொண்டார்; ஆனால், பத்தாண்டுக்கால சேவைக்குப் பின்னர், (சட்டம், வணிகப் பட்டதாரியான) தமது மகன், மாதம் ரூ. 500 மட்டுமே சம்பளம் பெறுகிறார் என்று கூறினர்.

மத்தியப்பிரதேசத்தில், 'சேதன' என்னுமிடத்திலுள்ள பிர்லா சிமெண்டுத் தொழிற்சாலையில் தமது மகன் வேலை பார்ப்பதாக அமைச்சர் சொன்னர்.

"எனது அமைச்சர் பதவியை, பிர்லா தன் நலத்திற்காகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார் என்று யாராவது சொன்னால், நான், அமைச்சர் பதவியை இராஜினமா செய்யத் தயாராக இருக்கிறேன்'' என்று ஹாத்தி சொன்னர்.

மத்திய அரசாங்கத்தில் ஹாத்தி துணையமைச்சராக இருக்கும்போது, அவரது மகன், பிர்லாவின் நிறுவனத்தில் வேலைக்குச் சேர்ந்தார்.

பீகார் அமைச்சரவை நிலை என்ன?

புதுடில்லி, நவ. 28—

மேற்கொண்டு எவ்விதத் தாமதமுமின்றி சட்டமன்றத்தைக் கூட்டுமாறு கூட்டணி முதலமைச்சர் மகா மாயா பிரசாத் சின்காவை, கவர்னர் அனந்தசயனம் அய்யங்கார் கேட்டுக்கொண்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

தற்போதைய சட்டமன்றத்தைக் கலைக்க வேண்டுமென்ற யோசனையை அவர் ஏற்கமாட்டார் என்று சொல்லப்படுகிறது.

காங்கிரசுக் கட்சிக்குள் சாதி அடிப்படையில் வேறுபாடுகள் தோன்றியுள்ளன; எனவே, தற்போதைய அரசாங்கத்தைக் காங்கிரசார் கவிழ்ப்பது எளிதான காரியமாகும் என்று சொல்லப்படுகிறது.

2,400 பட்டதாரி ஆசிரியர்கட்கு வேலை

கல்வியமைச்சர் தரும் செய்தி

சென்னை, நவ. 28—

"அடுத்த ஆண்டுமுதல் விருப்பப் பாடம் கற்பிக்கும் ஏற்பாடு செயல்படுத்தப்படவிருப்பதால், மேலும் 2,400 பட்டதாரி ஆசிரியர்கட்கு வேலை வாய்ப்பு ஏற்படும்''

என்று, சட்டமன்றத்தில், கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் தெரிவித்தார்.

தி. மு. க.-வும் தொழில் உலகமும்

தொழிலாளரை ஆதரிப்பது கழக ஆட்சி

'ஆனல் 'முதலாளி எதிர்ப்பு'க் கொள்கை அதற்குக் கிடையாது

'தொழில் அமைதியின்மை எல்லா மாநிலங்களையும்விட தமிழகத்தில் மிகமிகக் குறைவே' --- ஒரு விளக்கம்

"தமிழகப் புதிய அரசின் தொழில் கொள்கை, தொழிலாளரை ஆதரிப்பதுதான்; ஆனல் அதே சமயத்தில், 'முதலாளி எதிர்ப்புக் கொள்கையுடையது அல்ல' என்பதனைத்தான், கழக நிர்வாகத்தின் நடவடிக்கைகள் மெய்ப்பித்துக் கொண்டுள்ளன!

"'தமிழகத்தில் இந்த ஆண்டுதான் தொழில் அமைதி கெட்டுவிட்டது' என்பது தவறு; நீண்ட காலமாகவே அவ்வப்போது இருந்துவந்திருக்கிறது' என்ற முதலமைச்சரின் கருத்தினை எவரும் மறுப்பதற்கில்லை!

"தமிழகத்தில், 'தொழில் துறையில் அமைதி கெட்டிருக்கிறது' என்பது உண்மைதான் என்ருலும், அது, மேற்கு வங்காளத்தைப்போல்—கேரளத்தைப்போல் சீர்குலைந்துவிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

"இதைப்போல் மற்ற மாநிலங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், தமிழகத்தில் காணப்படும் தொழில் அமைதியின்மை, கணக்குக்கும் வராத நிலைக்குக் குறைந்த அளவுடையதுதான்!''

—['டைம்ஸ் ஆப் இந்தியா' 24—11—67 இதழில் வெளிவந்துள்ள கட்டுரையிலிருந்து]

சர்வாதிகாரத்துக்கு அடிகோல வேண்டாம்!

கிருஷ்ண மேனன் எச்சரிக்கை

கொச்சி, நவ. 27—

முன்னுள் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. வி. கே. கிருஷ்ண மேனன், இங்கு சட்டக் கல்லூரி மாணவரிடை பேசுகையில் அமைச்சரவைகள் நீக்கப்படுவதன் தீயவிளைவுகள் பற்றி எச்சரிக்கை விடுத்தார்.

"மேற்கு வங்கத்திலும், அரியாணுவிலும் இருந்த அமைச்சரவைகளை நீக்கியது சட்ட விரோதச் செயல்'' என்று கூறிக் கடுமையாகக் கண்டித்தார்; அவர் மேலும் கூறியதாவது:—

"அமைச்சரவையை நீக்க, கவர்னருக்கு அதிகாரம் உண்டா என்பதை முதலில் ஆராயவேண்டும்; இதே முறை மேலும் நீடித்தால், நாட்டில் சர்வாதிகாரம் ஏற்படும்.''

வேலையிழந்த ஆலைத் தொழிலாளருக்கு உதவி

'தற்காலிக ஏற்பாடே' என அமைச்சர் விளக்கம்

கோவை, நவ. 28—

"ஆலைகள் கதவடைப்பால் வேலையிழந்திருக்கும் தொழிலாளர்கட்கு அளிக்க எண்ணியுள்ள பணவுதவி தற்காலிகமான ஏற்பாடே''

என்று சட்ட அமைச்சர் திரு. மாதவன், இங்கு தெரிவித்தார்.

"வேலையிழந்த நெசவாலைத் தொழிலாளர்கட்கு மட்டும் பணவுதவி அளிப்பது என்பது இயலாது; ஏனெனில், மற்றத் தொழில் துறைகளிலும் வேலையில்லாதவர்கள் இருக்கிருர்கள். வேலையில்லாத எல்லோருக்குமே பணவுதவியளிப்பது இயலாத காரியம்'' என்று அவர் விளக்கமளித்தார்.

பதினேழு செய்த புரட்சி!

புதுடில்லி, நவ. 28—

நெடுங்காலத்திற்கு முன்னர் இந்து வங்காளத்தின் தலைநகரான 'நவாதீப்' நகருக்கு 17 பட்டாணியக் குதிரை வீரர்கள் வந்து—சென் மன்னர்களை விரட்டி—வங்கத்தைக் கைப்பற்றினர்!

1967 நவம்பரில் மத்திய அரசின் உதவியுடனும் கவர்னர் தர்மவீராவின் ஒத்துழைப்புடனும் டாக்டர் பி. சி. கோஷ் தலைமையில் 17 உறுப்பினர்கள் கட்சி மாறியதால், சட்டபூர்வமாக அமைக்கப்பட்டிருந்த அரசாங்கம் கவிழ்ந்தது!

பஞ்சாபிலும், 17 பேர் கட்சி மாறியதால், குர்னும் சிங் தலைமையில் உள்ள ஐக்கிய முன்னணி அமைச்சரவை கவிழ்ந்தது!

எனவே, ஆட்சியின் வீழ்ச்சிக்கு 17 பேர் காரணமாக இருந்திருக்கிருர்கள்!

தனியார் துறையில் ஐ.சி.எஸ். அதிகாரிகள்

புதுடில்லி, நவ. 28—

அரசாங்கப் பணியிலிருந்து விலகிய பின்னர், கடந்த பத்து ஆண்டுகளில் 19 ஐ.சி.எஸ். அதிகாரிகள், தனியார் நிறுவனங்களில் பணியாற்ற அனுமதிக்கப்பட்டிருக்கிருர்கள்.

14 ஐ.சி.எஸ். அதிகாரிகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

அரசாங்கப் பணியிலிருந்து ஓய்வு பெற்று இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர், ஐ.சி.எஸ். அதிகாரிகள் வேறு வேலை தேடிக் கொள்வதில் அரசுக்கு அட்டியில்லை.

அரசு வேலையிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர், பல முதிய ஐ.ஏ.எஸ். அதிகாரிகளும், நிதித் துறை அதிகாரிகளும், தனிப்பட்ட நிறுவனங்களில் வேலையில் சேர்ந்திருக்கிருர்கள்.

சிந்தனைக்கு ஒரு செய்தி:

'கவர்னர்களும் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்'

கேரள முதல்வர் விருப்பம்

"மாநில அளவில் உண்மையான சனநாயகம் தழைக்க வேண்டுமானல், கவர்னர்களும் தேர்தல் மூலம் நியமனம் ஆகவேண்டும்''

என்று, கேரள முதலமைச்சர் நம்பூதிரிபாடு விருப்பம் தெரிவித்திருக்கிருர்.

"மத்திய அரசின் காவல்காரர்களாக — ஏஜெண்டுகளாக மாநில கவர்னர்கள் இயங்காத நிலை இருக்கவேண்டுமானல், கவர்னர்களைப் பொதுமக்கள் மூலம் தேர்ந்தெடுப்பதுதான் ஒரே வழி''

என அவர் மேலும் கூறியிருக்கிருர்.

விமானநிலையத்துக்குள் செல்லக் கட்டணம்

மத்திய அரசின் ஏற்பாடு

சென்னை, நவ 28—

"மீனம்பாக்கம் விமானநிலையத்துக்குள் செல்பவர்கட்கு 50 காசு கட்டணம் வசூலிக்கும் ஏற்பாடு வருகிற சனவரி முதல் தேதியிலிருந்து செயல்படுத்தப்படும்'' என அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போது கட்டணம் எதுவும் வசூலிக்கப்படுவதில்லை என்பதும், விமானநிலையம் மத்திய அரசுக்கு உட்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

குணியமுத்தூர் பேரூராட்சி

கழகத் தோழர் தலைவராகத் தேர்வு

குணியமுத்தூர் பேரூராட்சியின் தலைவராக இருந்த பி. எம். காளியப்பகவுண்டர் இறந்துவிட்டதால், புதிய தலைவர் தேர்தல், 20—11—67-ல் பேரூராட்சி அலுவலகத்தில் நடைபெற்றது.

குணியமுத்தூர் – இடையர்பாளையம் தி.மு.க. தோழர் எஸ். எம். உஸ்மானும், காங்கிரசுப் பிரமுகர் என். டி. பி. ஆறுமுகமும் போட்டியிட்டனர்.

தி மு.க. தோழர் எஸ். எம். உஸ்மான் 9 வாக்குகளும், என். டி. பி. ஆறுமுகம் 7 வாக்குகளும் பெற்றனர்.

அதிக வாக்குகளைப் பெற்ற எஸ் எம். உஸ்மான் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

எஸ். எம். உஸ்மான் ஏற்கனவே பேரூராட்சித் துணைத் தலைவராக இருந்துவருபவர்.

தோழர் உஸ்மானுக்கு வட்ட தி.மு.க. செயலாளர் சே. அ. இராசமாணிக்கம், கிளைச் செயலாளர் தங்கமாணிக்கம், மற்றும் பலர் மலர் மாலைகள் அணிவித்துப் பாராட்டினர்.

அனைத்துலகத் தமிழ் மாநாடு

இரா. நெடுஞ்செழியன் அறிக்கை

சென்னை, நவ. 27—

சென்னை மாநகரில் நடைபெறவிருக்கும் இரண்டாவது அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு —கருத்தரங்கு பற்றி, தமிழகக் கல்வி தொழிலமைச்சர் திரு.இரா. நெடுஞ்செழியன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:—

இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் ஜாகீர் உசேன் வருகிற சனவரி 3-ம் நாள் மாநாட்டைத் துவக்கிவைப்பார்; அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சிச் சங்கத் தலைவர் பேராசிரியர் ஜே. பிலியோசத் தலைமை தாங்குவார்; மாநாட்டிற்கு வருகை தந்துள்ளவர்களைத் தமிழக முதலமைச்சர் அண்ணு லரவேற்பார்; இந்நிகழ்ச்சி அன்று மாலை 6-மணிக்கு கடற்கரையில் நடைபெறும்; அதில் பொதுமக்கள் கலந்துகொள்வர்.

மாநாட்டின் அலுவல்கள், சனவரி 4-ம் நாளிலிருந்து 11-ம் நாள் வரை நடைபெறும்; இவற்றில் கலந்துகொள்ள அழைக்கப் பெற்றுள்ள தமிழ் ஆய்வாளர்கள் மட்டுமே அதில் பங்குகொள்வர்.

மாநாட்டில் இடம் குறைவாக இருப்பதையொட்டி, சிறப்பாக அழைக்கப்பெற்றவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர். அவர்களுக்கு நாளொன்றுக்கு ரூ. 2 வீதம் அல்லது மாநாடு முழுவதற்கும் ரூ. 10 வீதம் கட்டணம் உண்டு.

மாநாட்டையொட்டிப் பொருட்காட்சி ஒன்றும் நடைபெறும்; அதைப் பொதுமக்கள் அனைவரும் பார்வையிடலாம். அதற்குச் சிறிதளவு நுழைவுக் கட்டணம் உண்டு.

மாநாட்டுக்கு வருகை தந்துள்ள அறிஞர் பெருமக்கள் சென்னை மாநகரில் பல்வேறு இடங்களில் சொற்பொழிவுகள் நிகழ்த்துவர். அவர்கள் சுற்றுலா செல்லும் பொழுது மாவட்டங்களிலும் சில நகரங்களிலும் சொற்பொழிவாற்றுவர்.

கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் விடப்படும் கிருஸ்துமஸ் விடுமுறையை சனவரி 4-ம்நாள் வரை நீட்டிக்குமாறு அவற்றின் அதிகாரிகள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

வெளிநாடுகளிலிருந்து வரும் அறிஞர் பெருமக்கள் பின்வரும் இடங்களுக்குச் சுற்றுலா செல்வர்:—

சனவரி 12: சிதம்பரம்; 13: திருவாரூர்; 14: கோவை; 15: மதுரை; 16: திருநெல்வேலி, கன்னியாகுமரி; 17: திருச்சி.

குடிசை வாழ்வோர் பற்றி டில்லியின் அக்கறையற்ற நிலை!

மாநில அரசு மட்டுமே பிரச்சினையைத் தீர்க்க இயலாது!

'பத்தாண்டுக்குள் புதிய திட்டத்தை உருவாக்கிட வேண்டும்'-- குடிசைவாசிகளிடை முதலமைச்சர் அண்ணா விளக்கம்

சென்னை, நவ. 27—

"குடிசை வாழ்வோர் பிரச்சினை நமக்குப் பெரும் பிரச்சினையாக இருக்கிறது; இந்தப் பிரச்சினையை, மாநில அரசு மட்டும் தீர்த்துவிட இயலாது! மத்திய அரசு ஓரளவுக்குத்தான் உதவுகிறதே தவிர, முழு உதவியையும் நமக்குத் தரவில்லை; எனவே, இன்னும் 5 அல்லது 10 ஆண்டுகளில் சென்னையிலுள்ள குடிசைவாழ் மக்களுக்குக் குடியிருப்புகள் அமைத்துத் தர, புதியதோர் திட்டத்தை நாம் உருவாக்கி ஆகவேண்டும்"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், தியாகராயநகர் ஏரிக்கரை மைதானத்தில், 'ஏரிக்கரை குடியிருப்போர் சங்க'த்தைத் துவக்கி வைத்துப் பேசுகையில் விளக்கினார்.

கூட்டத்திற்கு, தோழர் கோவிந்தசாமி தலைமை தாங்கினார்.

தோழர்கள் வி. எஸ். கோவிந்தராசன் எம்.எல்.ஏ., சி. சிட்டிபாபு எம்.பி., மாநகராட்சி உறுப்பினர்கள் இரா. சடகோபன், பவளவண்ணன், கு. ஆறுமுகம் ஆகியோரும், மற்றும் தோழர்கள் ந. மு. வாமனன், மு. அருணகிரி ஆகியோரும் பேசினர்.

அறிஞர் அண்ணா அவர்கள் பேசுகையில் மேலும் கூறியதாவது:—

சிக்கல்கள் உருவாக வழிகோலப்பட்டு விட்டன!

சென்னை நகரில் குடிசை வாழ் மக்கள், ஏரி—குளம்—குட்டை—என்று ஒன்றைக்கூட விடாமல் குடிசைகள் போட்டிருக்கிறார்கள்; இதனால், அவர்களுக்கும் தொல்லை—மாநகராட்சிக்கும், அரசுக்கும் புதிய புதிய சிக்கல்கள் தோன்றுகின்றன!

30 ஆண்டுகளுக்கு முன்னால் சென்னையின் இந்தப் பகுதியெல்லாம் குளம் குட்டையாக—மேடு பள்ளமாகவே இருந்துவந்தது; அவையெல்லாம் குடியிருப்புகளாக மாறியுள்ளது; அந்த அளவுக்கு வீட்டுத் தேவை அதிகரித்துள்ளது.

மக்களின் வீட்டு வசதித் தேவைகள் அனைத்தையும் முடிவு செய்யும் அளவுக்கு நமக்கும் வசதி இல்லை; முயற்சி எடுத்து மத்திய அரசைக் கேட்டாலும், அதனால் ஓரளவுதான் கொடுக்க முடிகின்றது; ஆகையினால்தான், 'ஏரிக்கரை குடியிருப்போர்' என்றெல்லாம் ஏற்படுகிறது!

கிராம நிலைமை மாறுகையில் இங்கு வந்தவர்கள் வருந்துவர்!

நான் சில காலமாகச் சொல்லி வரும் கருத்தை ஊன்றிப் பார்த்தவர்கள் ஒன்றை உணருவார்கள்; கிராமங்களிலெல்லாம் வசதிகள்கிடைக்காமல் அல்லல்பட்ட மக்களே வேலை தேடி-நாகரிகத்தை நாடி நகரங்களுக்கு வந்தார்கள்!

இன்றையத்தினம் கிராமங்கள் திருத்தப்பட்டுவருகின்றன; கிராமங்களில் வேலை வாய்ப்புகள் ஏற்பட—சிறிய தொழில்கள் பல அங்கெல்லாம் ஏற்பட—தமிழக அரசு திட்டமிட்டுச் செயலாற்றிவருகின்றது.

500-பேர் உள்ள ஒவ்வொரு கிராமத்திலும் பள்ளி வசதியும், மருத்துவ வசதியும் கிடைத்திடச் செய்வதென்ற குறிக்கோளை நிறைவேற்றிவருகிறது!

இன்னும் 10 அல்லது 15 ஆண்டுகளில் கிராமங்களிலெல்லாம் நல்ல வசதிகள் பெருகும்; 'கிராமங்களிலேயே இருந்தோமில்லையே; இருந்திருந்தால் நலமாக இருந்திருக்குமே' என்று இங்குள்ளோர் எண்ணும்படியாக அவை மாறும்!

இதற்காக—இங்கே வந்துவிட்டவர்களையெல்லாம், 'கிராமங்களுக்குத் திரும்புங்கள்' என்று சொல்லும் மனநிலை எனக்கில்லை!

கிராமங்களில் இருப்பவர்கள் மனதில், 'அங்கேயே இருக்கலாம்' என்ற எண்ணம் ஏற்படவேண்டும்,

சென்னையில் குடிசைவாசிகளாக உள்ள மக்கள், கிராமங்களில் உள்ள தங்கள் உற்றார் உறவினர்களை—நண்பர்களைச் சந்திக்கும்போது, இதனை எடுத்துரைக்கவேண்டும்.

அந்தநல்லூர் தொகுதியில் சீரணிப் பணி

2 பர்லாங் நீளமுள்ள கரை அமைத்தனர்

அந்தநல்லூர் ஊராட்சி ஒன்றிய சீரணித் தொண்டர்கள், சின்ன கருப்பூர் கிராமத்திற்கு அருகில் உள்ள கொடிங்கால் கரையை, 11—11—67 அன்று செப்பனிட்டார்கள்.

வெள்ள உடைப்பு ஏற்படும் இப்பகுதியில் சுமார் 2 பர்லாங் நீளத்திற்கு கரையின் இருபுறங்களையும அகலப்படுத்திச் சீர்செய்துள்ளனர்; இவ்வேலையை மேலும் தொடர்ந்து நடத்துவதென அந்தநல்லூர் ஊராட்சி ஒன்றியச் சீரணித் தொண்டர்கள் முடிவு செய்துள்ளனர்.

இவ்வேலையை, மாவட்ட வேளாண்மை அலுவலர் திரு. பி. மாணிக்கவாசகம் பி.எஸ்சி. துவக்கிவைத்தார்.

ஒன்றிப்பு ஆணையர் எம். செஞ்சப்மன் தலைமைதாங்கி, சீரணித் தொண்டர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

இப்பணியில் கிராமப் பொதுமக்களும், ஒன்றியத்தைச் சார்ந்த ஊழியர்கள் அனைவரும் உற்சாகத்துடன் பங்குகொண்டனர்.

பணியில் ஈடுபட்ட அனைவருக்கும் பெரியகருப்பூர் நடேச அம்பலக்காரர் உணவு வழங்கினார்.

தீப்பிடிக்காத வீடு கட்டும் திட்டத்தில் தாமதம் ஏன்?

முதலமைச்சர் அண்ணா விளக்கம்

சென்னை, நவ. 26—

"தீப்பிடிக்காத வீடுகள், கட்டுவதற்குப் பணம் இருந்தும், அந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியாமல் இருப்பதற்கு இரு முக்கியக் காரணங்கள் இருக்கின்றன; முதல் காரணம், 'தீப்பிடிக்காத வீடுகள் கட்டுவதற்குப் போதுமான இடவசதி இல்லை என்பதாகும்; இரண்டாவது காரணம், செங்கல் கிடைக்காதது ஆகும்"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், 'ஏரிக்கரை குடியிருப்போர் சங்க'த்தைத் துவக்கிவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்; அதுபற்றி அவர் விளக்கியதாவது:—

"நகரில் குடிசைகள் தீப்பிடித்த பல இடங்கள், தனிப்பட்டவர்களுக்குச் சொந்தமானவை—அந்தப் பகுதிகளின் பெயரைப் பார்த்தாலே அது புரியும்—அந்த இடத்தில் புதிய வீடுகள் கட்டச் சென்றால், அதன் உரிமையாளர்கள், வழக்குமன்றத்தில் போய்த் தடுக்கிறார்கள்; 'என் நிலத்தில் குடிசை போட்டு இருந்ததே சட்டவிரோதம்; அதில் நீ வேறு வீடு கட்டிக் கொடுத்தால், என் நிலம் என்ன ஆவது?' என்று கேட்கிறார்கள்; 'சரி; நிலத்தை விலைக்குத் தாருங்கள்' என்றால், நான் மிரளக்கூடிய விலையைச் சொல்கிறார்கள்; ஒரு வீட்டுக்கான அடி மனையை (கிரவுண்டு) ரூ. 15 ஆயிரம்முதல் ரூ. 30 ஆயிரம் வரை சொல்லுகிறார்கள். இதை நான், 'அநியாயம்' என்று சொல்லமாட்டேன்; 'எனக்கு மயக்கம் தருவதாக உள்ளது' என்றே சொல்லுகிறேன்; 'அக்கிரமமானது' என்று சொல்லவில்லை; 'அவ்வளவு விலை கொடுத்து வாங்கப் பண வசதி இல்லை' என்றுதான் சொல்லுகிறேன்.

வீடுகள் கட்டுவதற்கான நிலம் இன்றையத்தினம் சரியான முறையில் கிடைக்காததால், அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலத்திலும், மாநகராட்சிக்குச் சொந்தமான இடங்களிலும், வீட்டு வசதித் துறைக்குச் சொந்தமான நிலுத்திலுமாக இதுவரை ஓராயிரம் வீடுகள் அளவுக்குக் கட்டி முடிக்கப்பட்டுள்ளன; இன்னும் கைவசமுள்ள பணத்தைக் கொண்டு மேலும் இரண்டாயிரம் வீடுகளைக் கட்டலாம்; இந்தப் பணத்தைக் கொண்டு வீடுகளைக் கட்ட இடங்களைத் தேடிவருகிறோம்.

கட்டிடத்துக்கான இடம் கிடைத்தாலும், முக்கியமான தடையாக உள்ளது செங்கல் கிடைக்காததாகும். செங்கற் சூளைக்காரர்கள் கேட்கிற விலையைக் கொடுத்து வாங்கிக்கொண்டு கணக்கெழுதினால், 'ஆடிட்டர்'கள் ஒத்துக்கொள்ளமாட்டார்கள்.

அரசு நிர்ணயித்த விலைக்கு மேல் மேல் 10—15 ரூபாய் கொடுத்தால் செங்கற்கள் இப்போதும் கிடைக்கும்; ஆனால், நிர்வாகச் செலவினத்தில் இது கண்டிக்கப்படும்.

இதெல்லாம் வருகின்ற சனவரி மாதம் வரையில்தான்; அப்போது அவர்கள் என்னைத் தேடி வருகின்ற நிலை ஏற்படும்.

இலட்சக்கணக்கில் செங்கற்களை உற்பத்தி செய்யக்கூடிய இரு நவீன ஆலைகளைத் தமிழக அரசு விரைவில் அமைத்திடும்; அல்லது பெறும்.

இதையெல்லாம் சுட்டிக்காட்டி, 'இன்னும் அதிகமாக நிதி உதவி தாருங்கள்' என்று கேட்டால் மக்கள் தாராளமாகக் கொடுப்பார்கள். நல்ல காரியங்களுக்குக் கேட்டால், 'இல்லை'யெனச் சொல்லாது வழங்குவர் நமது மக்கள்!"

மக்களை மறந்ததால் காங்கிரசு தோற்றது!

மக்களை மதித்ததால் கழகம் வென்றது

விருதுநகரில் புரட்சி நடிகர் விளக்கம்

விருதுநகர், நவ. 26—

"ஒருவருக்குப் பதவி வருவதும் போவதும் அவருடைய கையில் இல்லை—மக்களிடம்தான் இருக்கிறது! இருபதாண்டுக் காலத்தில் காங்கிரசுக் கட்சி மக்களை மறந்தது—இப்போது காங்கிரசை மக்கள் மறந்துவிட்டனர்!

"பெரிய முதலாளிகளையும், மிட்டாமிராசுகளையும் காங்கிரசு நம்பியது—மக்களை நம்பவில்லை; அதனால் மக்கள், காங்கிரசை நம்ப மறுத்துவிட்டனர்!

"திராவிட முன்னேற்றக் கழகம் அப்படிப்பட்ட கட்சியல்ல—இது மக்கள் கட்சி; மக்களையே நம்பியிருக்கும் கட்சி; மக்கள் கருத்துக்கு மதிப்புக் கொடுக்கும் கட்சி!

"நமது கழகம் பணத்தை நம்பி இல்லை—உழைப்பையும், மக்கள் ஆதரவையும் மட்டுமே நம்பி இருக்கிறது; அதன் பயனாகத்தான் ஆட்சிப் பொறுப்பை ஏற்றது"

என்று, புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் எம்.எல்.ஏ. இங்கு நடந்த சிறப்புக் கூட்டத்தில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

விருதைத் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் தோழர் பெ. சீனிவாசனுக்குக் கார் அளிக்கும் பொருட்டு ஏற்பாடு செய்யப்பட்ட இந்தச் சிறப்புக் கூட்டத்தில் எம்.ஜி.ஆர். மேலும் பேசுகையில் கூறியதாவது:—

"சீனிவாசனுக்குக் கார் அளிப்பதற்காக இந்த நிதி திரட்டப்படுகிறது. 'சீனிவாசனுக்குக் கார் ஏன்? நடந்து போனால் என்ன? சைக்கிளில் போனால் என்ன?' என்று சிலர் கேட்கலாம்.

பொது வாழ்வில் ஈடுபட்டுள்ளவர்கட்குப் போதிய வசதியும் வாய்ப்பும் செய்து கொடுத்தால்தான் பொது மக்களுக்குத் தேவையான பயன்கள் கிட்டும். இந்தக் கார், மக்களுக்காகவே சீனிவாசனால் பயன்படுத்தப்படும்; விளையாட்டுக்காகவும் உல்லாசத்துக்காகவும் பயன்படுத்தப்படமாட்டாது."

இந்தச் சிறப்புக் கூட்டத்தின் வாயிலாக வசூலான தொகையில், செலவு போக ரூ. 10,000 மிச்சப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

மிருகக் காட்சி சாலையில் குழந்தைகட்கு இரயில் விடும் திட்டம்

அடிக்கல் நாட்டினார் முதலமைச்சர் அண்ணா

சென்னை, நவ 27—

சென்னை மிருகக் காட்சி சாலையில், குழந்தைகளுக்கான இரயில் விடும் திட்டத்திற்கு முதல் அமைச்சர் அண்ணா அவர்கள் நேற்று அடிக்கல் நாட்டினார்.

இவ்விழா, மிருகக் காட்சி சாலையில், மேயர் இரா. சம்பந்தம் தலைமையில் நடைபெற்றது.

ரூ. 5 இலட்சம் செலவில் $1\frac{1}{2}$ மைல் நீளம் அமைக்கப்படவிருக்கும் இந்த இரயில் பாதை மூலம், குழந்தைகள் மிருகக் காட்சி சாலையைக் சுலபமாகச் சுற்றிப் பார்க்கலாம்.

குழந்தைகள் இரயில் திட்டம் இன்னும் 3 மாதங்களுக்குள் முடிந்துவிடும். இதற்கான எஞ்ஜின் இலண்டனிலிருந்து வருகிறது; மற்ற இரயில் பெட்டிகளெல்லாம் சென்னையிலேயே தயாரிக்கப்படுகின்றன.

இந்த இரயிலில் ஒரே சமயத்தில் 100 குழந்தைகள் செல்லலாம்; இது மிருகக் காட்சி சாலையின் உட்புறத்தைச் சுற்றிக்கொண்டு, 'மை லேடீஸ்' கார்டன்வரை செல்லும்.

இரயில் செல்லும் பாதையில் 2 மேம்பாலங்களும், இரயில் கேட்டுகளும் அமைக்கப்படும். பல இரயில் நிலையங்களும் இடையில் அமைக்கப்படும்.

இரயிலில் செல்வதற்குக் கட்டணம் வசூலிக்கப்படும்.

அண்ணா ஆய்வுரை

அண்ணா அவர்கள் அடிக்கல் நாட்டி உரையாற்றுகையில் கூறியதாவது:—

"குழந்தைகட்கு நல்லறிவு புகட்டக்கூடியவிதத்தில் இத்திட்டம் அமைந்துள்ளது. சில ஆண்டுகளுக்குமுன் பரோடா நகரில் உள்ள ஒரு பூங்காவில் நான் இத்தகைய குழந்தைகள் இரயிலைப் பார்த்தேன்; 'அதே போலச் சென்னையிலும் அமைக்க வேண்டும்' என்று விரும்பினேன்; என் விருப்பதைத் ஏற்றுக்கொண்டு நிறைவேற்றி வைக்க மாநகராட்சி இன்றையத்தினம் முன்வந்திருப்பது எனக்குப் பெத்த மகிழ்ச்சியைத் தருகிறது.

இத்திட்டத்துக்கு எல்லாக் கட்சியினரும் ஆதரவு தந்துள்ளனர்.

இந்த இரயில் அமைப்புத் திட்டத்தை மிகவும் கவர்ச்சிகரமாக அமைக்கவேண்டும். இரயில் செல்லும் பாதையையும், மலைகளையும், மற்றும் பல இயற்கைக் காட்சிகளையும் அமைக்கலாம். இடையிடையே இரயில் நிலையங்களை அமைத்து, அவற்றிற்கு, கன்னியாகுமரி—பம்பாய்—டில்லி—கல்கத்தா என்ற பெயர்களை இடலாம்; இதனால் குழந்தைகளின் அறிவு பெருகும்."

இவ்விழாவில், மாநகராட்சி தி. மு. க. கட்சித் தலைவர் வி. முனுசாமி, எதிர்க் கட்சித் தலைவர் எஸ். ஜி. விநாயகமூர்த்தி, துணை மேயர் கிருஷ்ணமூர்த்தி ஆகியோரும் பேசினர்.

ஆணையர் அம்பாசங்கர் நன்றி கூறினார்.

தமிழகத்தில் திறந்தவெளிச் சிறை

புழலில் ஏற்படுத்தத் திட்டம்

சென்னை, நவ. 25—

"சென்னையை அடுத்துள்ள புழல் கிராமத்தில், திறந்த வெளிச் சிறை ஏற்படுத்தத் தமிழக அரசு எண்ணியிருக்கிறது"

என சட்ட அமைச்சர் திரு. மாதவன், சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

"எத்தகையக் கைதிகளை அங்கு வைப்பது என்பதுபற்றி இன்னும் முடிவு செய்யவில்லை" என்றார்.

"மத்திய சிறையில் இட நெருக்கடி நிலவுவதால், பாளையங்கோட்டைச் சிறையும் மத்திய சிறையாகக் கொள்ளப்பட்டிருக்கிறது" என்று கூறினார்.

சட்டமன்றத்தில்...!

[போகாத நிருபர்]

கொல்லன் தெருவில், சாதாரண ஊசியைக்கூட அல்ல—காதறுந்த ஊசியை வியாபாரம் செய்ய நினைத்தவனின் போக்கை, 'மனத் துணிவு' என்று கொண்டு விடுவதற்கில்லை; 'செயல் திறன்' என்றும் சொல்லிவிட முடியாது!

'இனிமேலாவது'—'இதுவரை' என்ற வார்த்தைகளில் தொக்கி நிற்கும் உறவுகளை, முதலமைச்சர் அண்ணா அவர்கள் சட்டமன்றத்தில் சென்ற தடவை சுட்டிக்காட்டி, காங்கிரசு உறுப்பினர் ஒருவருக்கு விளக்கமளித்திருக்கிறார்!

ஆனால் அதை அப்போது கவனிக்காததனாலோ, அல்லது, 'இப்போது ஒரு தடவை முயன்று பார்க்கலாமே' என்ற தப்புக்கணக்கினாலோ—வேட்டைக்காரன்புதூர் நிகழ்ச்சி வழக்குமன்றத்தில் இருந்தாலும் அதை விட்டுவிட்டு—'இனிமேலாவது இதுபோன்ற நிகழ்ச்சிகள் நடக்காது என்று அரசு உறுதிமொழி தருமா?' என்று கேட்ட விநாயகத்துக்கு,

> **"இனிமேலாவது என்று உறுதிமொழி கொடுத்தால், இதுவரை நடந்ததாக ஒப்புக்கொண்டதாகப் பொருள்படும்; ஆகவே, 'இனிமேலாவது' என்றுகூற நாங்கள் ஏமாளிகள் அல்லர்"**

என அண்ணா அவர்கள், பலத்த கைதட்டல், சிரிப்பொலிக்கிடையே கூறியது — கொல்லன் தெருவில் காதறுந்த ஊசி விலைபோகாத கதையைத்தான் நினைவுபடுத்தியிருக்கிறது!

நேற்று முடிந்திருக்கும் மின்சாரத்துறை மீதான நிதிநிலை அறிக்கை விவாதம் பெயருக்கேற்ற வகையில், 'ஒளி'—'அதிர்ச்சி' இரண்டினையும் கொடுத்திருக்கிறது!

எச்சரிக்கையுடன் பயன்படுத்தப்பட வேண்டிய பொருளான மின்சாரத்தை—'அபாயம்' என்ற அறிவிப்பையும் மீறி—கண்டபடி தொட நேர்ந்தால், 'அதிர்ச்சி'யைப் பெற்றேதான் ஆகவேண்டும்!

திரும்பத் திரும்ப, 'இவையெல்லாம் நாங்கள் இருந்தபோது செய்த காரியமல்லவா?' என்ற 'பெருமை' ஒன்றினையே—பொதுமேடைகளைப் போலவே சட்டமன்றத்திலும் எடுத்துவந்த எதிர்க்கட்சித் தலைவருக்கு, அண்ணாவின் விளக்கம், இனியாவது ஒரு பயன்படும் பாடமாக இருக்கட்டும்!

'மூல'த்தைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் காங்கிரசுக்காரர்கள் மிக 'ஆழ'மாகப் போவார்களானால் அது கடைசியில், 'வெள்ளைக்காரனுக்கு நன்றி சொல்லவேண்டிய கட்டத்துக்குத்தான் கொண்டு செல்லும்' என்ற உண்மையை, இதுவரை ஆண்டவர்கள் இனியேனும் உணரவேண்டும் என்ற தெளிவு—கருத்திருமன் மூலம்—வெளியே உள்ள காங்கிரசுக்காரர்களுக்கும் கிடைக்கட்டும்!

அண்ணா அவர்களின் வாதத் திறமையில், அப்போதைக்கு அப்போதுதான் நல்ல 'அறுவடை' மட்டுமல்ல — எதிர்காலத்துக்கான 'சேமிப்'பும் இருக்கும்!

'தொழில் துறைக்கான மின்சாரக் கட்டணத்தை இன்னும் கூட்டலாம்' என்று கம்யூனிஸ்டு—சுதந்தரா—காங்கிரசு ஆகிய எதிரெதிர் முகாம்களிலிருந்து யோசனை வருகிறதென்றால், நிதியமைச்சர் பொறுப்பிலும் இருக்கும் அண்ணா அவர்கள், அந்த வருவாயை, 'வேண்டாம்' என்று சொல்லுவார்?

> "உரிய நேரத்தில் அந்த யோசனை அமுல் நடத்தப்படும்போது அவர்களுடைய ஆதரவு இருக்குமென நம்புகிறேன்"

என்று ஒரு 'எதிர்காலச் சேமிப்பை' இப்போதே ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்!

நேற்றைய கேள்வி நேரம், 'செவிக்கு உணவு' பற்றியும், 'செவிக்கு உணவு' பெறும் மாணவர்களின் 'வாய்க்கு உணவு' பற்றியும் இருந்திருக்கிறது!

"கல்வித் துறையில் அவ்வப்போது யோசனைகள் சொல்லவும், கல்வித் துறை நடவடிக்கைகள் பற்றிப் பரிசீலனை செய்வதற்கும் சட்டமன்ற நிபுணர்கள்—பேராசிரியர்கள்—வல்லுநர்கள் அடங்கிய இரண்டு குழுக்களை அரசு நிறுவ இருக்கிறது" என அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தந்துள்ள அறிவிப்பு, இத்துறையில் இருந்துவரும் ஒரு நீண்ட கால தேவையினைப் போக்குவதாக இருக்கிறது!

மாணவர்களின் மதிய உணவுத் திட்டம் பற்றிக் கேட்கப்பட்டிருக்கும் அதிக அளவு விளக்கங்கள்—காங்கிரசு உறுப்பினர் விநாயகத்தின் 'வாதத் திறமை'ப்படி குறிப்பிட வேண்டுமானால்—இதுவரை இத்திட்டத்தில் உள்ள 'குறைபாடுகள் மலிந்த' தன்மையினைக் காட்டுகிறது!

"திட்டத்துக்கான 'நிதி திரட்டும் பணியிலோ அல்லது உணவு தயாரிக்கும் பணியிலோ ஆசிரியர்கள் ஈடுபடக்கூடாது" என்று கழக அரசு அண்மையில் அனுப்பியிருக்கும் உத்தரவு, 'அப்படியானால், இத்தனை ஆண்டுகளாக......?' என்ற கேள்விக்கு இடமளிப்பதைத் தவிர்க்க முடியவில்லை!

"கூடுதல் நிதி தந்து இன்னும் பயனுள்ளதாக்கும் நிலையில் அரசின் பொருளாதார வசதி இல்லையென்றாலும், அந்தந்தப் பகுதியில் உள்ள வசதி படைத்தவர்கள், இத்திட்டத்துக்கு உறுதுணை அளிக்கலாம்" என அண்ணா அவர்கள், காஞ்சி நடப்பு ஒன்றினைக் காட்டி கும்பகோணத்துக்கு அறிவுரை தந்திருப்பது, ஏனைய பகுதிச் செல்வந்தர்களுக்கும் பொருந்துவதாக இருக்கிறது!

மின்சாரத் துறை ஊழியர்கள் 'தற்காலிக' நிலைமையிலிருந்து நிரந்தரமாக்கப்படவேண்டியது குறித்தும், இலாகாவுக்கு வேண்டிய சிமெண்டுக் கம்பங்களை மின்சாரத் துறையே தயாரிக்கலாம் என்ற யோசனை குறித்து முன்னரே தெரிவிக்கப்பட்டிருக்கும் கருத்துக்களை கழக உறுப்பினர் **சி. வி. எம். அண்ணாமலை** நேற்று மீண்டும் வலியுறுத்தியிருக்கிறார்!

சட்டமன்ற மேலவையில்....!

நேற்றையத் தினம் சட்டமன்ற மேலவையிலும் புதிய உறுப்பினர் **க. அறிவழகன்,** துணைக் கொறடர் **என். வி. நடராசன்** ஆகியோர், மின்சாரத் துறை நிதிநிலை விவாதத்தில் பங்கு கொண்டிருக்கின்றனர்.

"நெய்வேலி அனல் மின்சார உற்பத்தியைத் தமிழக அரசே ஏற்று நடத்தவேண்டும்" என்று என். வி. நடராசன் வலியுறுத்தியிருப்பது, விநியோக—விலைப் பிரச்சினையில் மத்திய அரசு காட்டவேண்டிய 'தளர்ச்சி'யை, மேலும் சுட்டிக் காட்டுவதாக இருக்கிறது!

"பெரும் அளவு மின்சாரம் பெறும் தொழில் நிலையங்களிடமிருந்து அதிக அளவு 'காப்புத் தொகை'யை வாங்குவது, மின்சார இலாகாவுக்குப் புதிய வேலைகளைத் துவக்குவதற்கான கூடுதல் நிதி வசதியைத் தரும்" என்ற புதிய யோசனையை, க. அறிவழகன் வழங்கியிருக்கிறார்!

ஸ்கூட்டரில் செல்வோர் கவசம் அணியக் கட்டாய விதி

முன்னாள் முதல்வரின் குறிப்புப் பரிசீலனை

சட்டமன்றத்தில் அமைச்சர் மு. கருணாநிதி தகவல்

சென்னை, நவ. 24—

"ஸ்கூட்டரிலும், மோட்டார் சைக்கிளிலும் செல்பவர்கள், மேலை நாடுகளில் பயன்படுத்துவது போன்ற பாதுகாப்புக்கான தலைக் கவசம் அணியக் கட்டாயப்படுத்துவதுபற்றி யோசிக்கப்பட்டு வருகிறது"

என்று, பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி, சட்டமன்றத்தில் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

கே. விநாயகம் :—"ஸ்கூட்டரை ஓட்டுபவர் மட்டும் இந்தத் தொப்பியை அணிந்தால் போதுமா? பின்னாலே அமர்ந்து செல்லும் மங்கையும் அணியவேண்டுமா?"

அமைச்சர் :—"ஓட்டுபவருக்கு ஆபத்து என்றால், பின்னாலே அமர்ந்து செல்பவருக்கும்தான் அந்த ஆபத்து ஏற்படும்."

குளத்தூர் கோதண்டம் :—"இந்த யோசனை இன்றுள்ள அரசுடையதா? அல்லது முன்பிருந்த அரசின் யோசனையா?"

அமைச்சர் :—"மருத்துவ நிபுணர் டாக்டர் இராமமூர்த்தி, 'இந்தக் கவசம் அணிவதால், விபத்தில் ஏற்படக்கூடிய ஆபத்தை ஓரளவு தவிர்க்கலாம்' என்று முந்திய அரசுக்குத் தெரிவித்த யோசனைப்படி, முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலம், 8—7—66-ல், 'இத்தகைய கவசம் அணியும் முறையைக் கொண்டுவரலாம்' என்று ஒரு குறிப்பு எழுதிவைத்துவிட்டுச் சென்றிருக்கிறார்."

பூந்தாழங்குடி கலவர வழக்கு

திருவாரூர், நவ. 27—

பூந்தாழங்குடி கலவர வழக்கில் தொடர்புடைய சண்முகம் என்பவர்மீதும், மற்றும் 109-பேர்மீதும் திருவாரூர் போலீஸ் இன்ஸ்பெக்டர், சப்-மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்தார்.

அவர்களில் 88-பேரைக் காவலில் வைக்க சப்-மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார்.

தொழிலாளர் குடும்பங்கட்கும் மருத்துவ வசதித் திட்டம்

முதலமைச்சர் அண்ணா துவக்கிவைத்தார்

சென்னை, நவ. 28—

தொழிலாளர்களுக்கான அரசாங்க இன்சூரன்சுத் திட்டத்தில் உறுப்பினர்களாக உள்ளவர்களுக்கு அளிக்கப்படும் மருத்துவ உதவியை அவர்களது குடும்பத்தினருக்கும் விரிவுபடுத்தும் திட்டத்தைத் துவக்கிவைத்ததுடன், அயனாவரத்திலுள்ள தொழிலாளர்களுக்கான அரசாங்க இன்சூரன்சு மருத்துவமனையில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள இரு மாடிப் பகுதிகளையும் முதலமைச்சர் அண்ணா அவர்கள், நேற்று திறந்துவைத்தார்.

இந்தப் புதிய திட்டத்தின்மூலம் இதுவரையில் ஓர் இலட்சம் பேருக்குக் கிடைத்துவந்த மருத்துவ உதவி, தொழிலாளர் குடும்பத்தினரையும் சேர்த்து இனி 6-இலட்சம்பேருக்குக் கிடைக்கும்.

கீழ்ப்பாக்கம், அம்பத்தூர், புழல் கிராமம், திருவொற்றியூர், கொண்டித்தோப்பு, பல்லாவரம், ஆவடி ஆகிய இடங்களில் மொத்தம் ரூ. 51.18-இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள 7 மருத்துவமனைகளையும், நர்சுகளுக்கான விடுதிகளையும் பொதுநலத் துறை அமைச்சர் சாதிக் பாட்சா திறந்துவைத்தார்.

திறப்பு விழா நிகழ்ச்சிக்கு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் செ. மாதவன் தலைமை தாங்கினார்.

விழாவுக்கு வந்திருந்தவர்களை மருத்துவத் துறைத் துணை நெறியாளர் டாக்டர் குமாரவேல் வரவேற்றார்.

இ. எஸ். ஐ. திட்டத்தின் அனைத்திந்தியப் பொறுப்பாளர் டி. சி. பூரி, சிறப்புரை ஆற்றினார்.

தலைமைப் பொறியாளர் உசேன், கட்டிட வேலைகளைப்பற்றி விளக்கிக் கூறினார்.

மருத்துவத் துறைச் செயலாளர் அனந்த பத்மநாதன், குடும்பக் கட்டுப்பாடுபற்றிப் பேசினார்.

விழாவிற்கு வருகை தந்த முதலமைச்சர் அண்ணா அவர்கள், நர்சுகளின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

29--11--67

சென்னை 24-வது வட்டம்

தி. மு. க. சார்பில் இரவு 7-மணிக்கு மூலக்கொத்தளம் அழகிரி திடலில்; தலைவர் : என். ஏழுமலை; பேசுவோர் : அமைச்சர் சாதிக் பாட்சா, வி. எஸ். கோவிந்தராசன் எம்.எல்.ஏ., எம். ஆர். கண்ணன் எம்.எல்.ஏ., எஸ். எம். துரைராசு எம்.எல்.ஏ., திருச்சி சௌந்தரராசன் பி.ஏ., ஜீவா கலைமணி பி.ஏ., மா. அரசு, தமிழழகன்.

சென்னை 27-வது வட்டம்

தி. மு. க. சார்பில் இரவு 7-மணிக்கு, பெருமாள்கோயில் தோட்டம் 4-வது சந்தில்; தலைவர் : கோ. இராமச்சந்திரன்; பேசுவோர் : எல். கணேசன் எம்.எல்.ஏ., ஆலடி அருணா எம்.எல்.ஏ., என். வீராசாமி எம்.எல்.ஏ., ஆர். ஆர். முனுசாமி எம்.எல்.ஏ., எம். ஆர். கண்ணன் எம்.எல்.ஏ., பழனியம்மாள் எம்.எல்.ஏ., எம். ஆர். சந்திரன்.

மோகனூர்

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு அழகிரி திடலில்; தலைவர் : பி. நல்லமுத்து; பேசுவோர்: வெ. கண்ணன், கே.எஸ். இராதாகிருட்டினன், எம். சுப்பிரமணியம், வி. மணிவாசகம், இரா. மு. குருசாமி, கே. வேலுசாமி.

30--11--67

மதுரை 4-வது வட்டம்

தி. மு. க. சார்பில் இரவு 7-மணிக்கு முனிச்சாலை ரோடு ஒபுளா படித்துரைத் திடலில்; தலைவர் : ஏ. எஸ் கலைநேசன்; பேசுவோர் : எஸ். முத்து எம்.எல்.சி., பி. எஸ். மணியம் எம்.எல்.ஏ., கு. திருப்பதி பி.ஏ., பி.எல்., கூடலரசன், சொ. காவேரிமணியம் பி.எஸ்சி., பி.எல்., கே. எஸ். சந்தானம் எம்.சி., எம், மதுரைவீரன் எம்.சி.

மீண்டும் தீ விபத்து

சென்னை, நவ. 27—

சென்னை மயிலாப்பூர் பிளாட்டர்புரத்தில் இன்று பிற்பகல் 3-45 மணியளவில் ஏற்பட்ட தீ விபத்தினால் 31 குடும்பங்கள் வாழ்ந்த 8 குடிசை வீடுகள் எரிந்து சாம்பலாயின.

தீயணைப்புக் குழுவினர் தக்க தருணத்தில் விரைந்து பணியாற்றியதால் 200-க்கும் அதிகமான குடிசைகள் தீ பிடிக்காமல் காக்கப்பட்டன.

இத்தீவிபத்தினால் ரூ. 3,000 பெறுமான பொருள்கள் சேதமடைந்தன.

விபத்தில் சிறிதளவு காயமடைந்த ஒருவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

விபத்துக்கான காரணம் தெரியவில்லை.

கல்லூரிகளில் மாணவர்களை அனுமதிக்கும் முறை

அமைச்சர் தகவல்

சென்னை, நவ. 27—

"'கல்லூரிகளில் சேருவதற்குத் தகுதியுள்ளவர்கள்' என்று அத்தாட்சி கொடுத்தபிறகும், மதிப்பெண்களின் அடிப்படையில் மாணவர்களைச் சேர்ப்பதுதான் சரி என்ற முறையைத் தமிழக அரசு ஒப்புக்கொள்கிறது"

என்று கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், சட்டமன்ற மேலவையில் கூறினார்.

சர்க்கரை விற்பனையில் கொள்ளை இலாபம்

பம்பாய், நவ. 28—

மகாராட்டிரத்தில் சர்க்கரை விநியோகத்தின் மூலம் அரசாங்கக் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளும், சர்க்கரை மொத்த விற்பனையாளர்களும் சுமார் ரூ. 50 கோடி இலாபம் சம்பாதிப்பார்கள் எனத் தெரிகிறது. இதன் காரணமாக நடுத்தர மக்களும், ஊதியம் பெறுகிற மக்களும் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள்.

பம்பாயில் ஒரு கிலோ சர்க்கரை தற்போது ரூ. 9 முதல் ரூ. 10 வரையில் விற்கப்படுகிறது.

மகாராட்டிரத்தில் 32 கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. இதன் உற்பத்தியில் 40 சதவீதத்தை பொது மார்க்கெட்டில் விற்பனை செய்ய மாராட்டிர அரசு உத்தேசித்திருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24- சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13 அச்சிட்டு வெளியிடப்படுகிறது.)